Under Section 173 BNSS

FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8167299

1. District : திருப்பூர் மாவட்டம்
PS: ஊ.த.க.பிரிவு காவல்நிலையம்
Year: 2026 ஆண்டு
FIR No.: 5/2026/AC/TPR முத.அ. எண்
Date: நாள் 15.06.2026

2. (i) Act சட்டம்: The Prevention of
(ii) Act சட்டம்: Corruption (Amendment)
(iii) Act சட்டம்: Act, 2018
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :
Sections பிரிவுகள்: 7 (a) & (b)
Sections பிரிவுகள்:
Sections பிரிவுகள்:

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from : நாள் முதல்
Date to : 11.6.2026 சுமார் 11.45 மணி நாள் வரை
Time Period : நேர அளவு
Time from : நேரம் முதல்
Time to : 12.6.2026 சுமார் 11.00 மணி நேரம் வரை

(b) Information Received at PS. Date : 15.06.2026 காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்
Time : 08.45 மணி நேரம்

(c) General Diary Reference : Entry No(s) VOL. I. பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்
Time : 08.45 மணி நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்தி மூலமாக (typed)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 4 கி.மீ. தென் கிழக்கு

Beat Number : முறைக் காவல் எண் –
(b) Address : முகவரி கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம், தொட்டிபாளையம் கிராமம், திருப்பூர்.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : K. கோவிந்தராஜன் குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
(b) Father's/ Husband's Name : கிருஷ்ணமூர்த்தி (late) தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு –
(d) Nationality : இந்தியன் நாட்டினம்
(e) Passport No. : – வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : – வழங்கப்பட்ட நாள்
Place of Issue : – வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் அரசுஊழியர்
(g) Address : D.NO. 1A, ஸ்டேட் பேங்க் காலனி, கோதிவீதி, முகவரி கிராயபுரம் ரோடு, திருப்பூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திரு. ஞானசேகரன், கிராம நிர்வாக அலுவலர், தொட்டிபாளையம் கிராமம், திருப்பூர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
–

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித் தாள் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

15.06.26

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

15/6/26.

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 15.06.2026.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் பி. கீதாலட்சுமி
Rank: நிலை .....No. எண் .....
காவல் ஆய்வாளர்
உ.தா.க. பிரிவு, திருப்பூர்.

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. கனம் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்ற நீதிபதி, முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருப்பூர் அவர்கள் முன்பாக.

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.05/2026/AC/TPR வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி...

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் B.கீதாலட்சுமி ஆகிய நான் 15.06.2026-ம் தேதி காலை 08.45 மணிக்கு அலுவலகத்தில் ஆஜரில் இருந்த போது திரு.கோவிந்தராஜன், த.பெ. கிருஷ்ணமூர்த்தி (லேட்), 1A ஸ்டேட் பாங்க் காலனி 3 வது வீதி, இராயபுரம் ரோடு, திருப்பூர் மாவட்டம் என்பவர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி எழுத்து மூலமாக கொடுத்த புகாரின் விபரம் பின்வருமாறு அனுப்புநர், K.கோவிந்தராஜன், த.பெ. கிருஷ்ணமூர்த்தி (லேட்),1A ஸ்டேட் பாங்க் காலனி 3 வது வீதி, இராயபுரம் ரோடு, திருப்பூர். பெறுநர், உயர்திரு காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்புத்துறை, திருப்பூர். ஐயா, நான் திருப்பூர், ராயபுரம் ரோடு, ஸ்டேட் பேங்க் காலனி 3வது வீதியில் கடந்த 25 வருடங்களுக்கு மேலாக எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். எனக்கு திருமணமாகி இரண்டு குழந்தைகள் இருக்கிறார்கள். நான் திருப்பூரில் உள்ள கௌரி கிருஷ்ணா ஹோட்டலில் அக்கவுண்ட்டன்ட் ஆக பணிபுரிகிறேன். என் தகப்பனார் பெயர் கிருஷ்ணமூர்த்தி. கடந்த 30.04.2008ம் தேதி இறந்துவிட்டார். எனது தாய் ஆண்டாள். கடந்த 29.12.2021ம் தேதி இறந்துவிட்டார். என் உடன் பிறந்தவர்கள் இரண்டு அண்ணன்கள். எனது மூத்த அண்ணன் மணிவண்ணன், கடந்த 2008ம் வருடம் இறந்துவிட்டார். எனது இரண்டாவது அண்ணன் விமல்குமார் என்னுடன் குடியிருக்கிறார். அவர் தனியாக சாப்ட்வேர்துறையில் பிசினஸ் செய்து வருகிறார். எனது அண்ணன் விமல்குமாருக்கு திருமணம் ஆகாததால் நாங்கள் அனைவரும் ஒரே வீட்டில் குடியிருக்கிறோம். எனது பெற்றோர் இறந்தவுடன் முறையாக இறப்பு சான்றிதழ்கள் பெற்றுள்ளோம். எனது மூத்த அண்ணன் இறந்ததற்கும் இறப்பு சான்று முறையாக பெற்றுள்ளோம். எனது தந்தை மற்றும் பெரிய அண்ணன் இறந்த போது அவர்களுக்கு உண்டான வாரிசு சான்றிதழை முறையாக பெற்றுள்ளோம். தற்போது எனது தாய் ஆண்டாள் இறந்தபிறகு எனக்கும் எனது

அண்ணனுக்கும் வேலை பளு அதிகமாக இருந்த காரணத்தினால் உடனடியாக வாரிசு சான்று பெற இயலவில்லை. தற்போது எங்கள் வீட்டில் உள்ள கேஸ் இணைப்பு எனது தாயார் ஆண்டாள் பெயரில் உள்ளது. அதை எனது மனைவி பெயரில் பெயர் மாற்றம் செய்ய நான் கேஸ் கம்பனியை அணுகிய போது எங்களது தாயாரின் வாரிசு சான்றிதழ் கேட்டார்கள். நான் இன்னும் வாங்கவில்லை என்றும் வாங்கி தருவதாக கூறியிருந்தேன். அதனால் வரும் எதிர்காலத்தில் எந்த ஒரு வேலைக்கும் வாரிசு சான்று வேண்டும் என்று தெரிந்து நானும் எனது அண்ணனும் வாரிசு சான்று பெற முடிவு செய்தோம். எனது அண்ணன் விமல்குமாருக்கு வேலை பளு காரணத்தினால் என்னை அந்த வேலை செய்ய சொன்னார். நான் கடந்த 06.06.2026ம் தேதி திருப்பூரில் உள்ள இ-சேவை மையம் மூலம் ரூ.60 செலுத்தி இணையதளம் மூலம் எனது தாயாரின் வாரிசு சான்றிதழுக்காக எனது தந்தை, தாய் மற்றும் மூத்த அண்ணன் ஆகியோரின் இறப்பு சான்றிதழ் நகல், எனது தந்தை மற்றும் மூத்த அண்ணனின் வாரிசு சான்றிதழ் நகல், எனது தாய் மற்றும் என்னுடை ஆதார் நகல்கள் மற்றும் எனது தாய் ஆண்டாளின் தாய் மற்றும் தந்தை அவர்களின் இறப்பிற்கான நோட்டரி உறுதி மொழி பத்திர நகல் ஆகியவை இணைத்து விண்ணப்பித்திருந்தேன். அந்த விண்ணப்ப எண். TN 7202606061784 நாள் 06.06.2026 ஆகும். அதன்பிறகு கடந்த 11.06.2026ம் தேதி காலை சுமார் 09.30 மணியளவில் செல்போன் எண் 7540094836லிருந்து எனது செல்போன் எண் 9629799199 ற்கு அழைத்து தொட்டிபாளையம் VAO ஆபிஸிலிருந்து பேசுவதாக கூறி, நான் கேட்டிருந்த வாரிசு சான்றிதழுக்கு சான்றிதழ் சரிபார்ப்பிற்கு அசல் ஆவணங்களுடன் தொட்டிபாளையம் VAO ஆபிஸிற்கு நேரில் வருமாறு கூறினார். நான் உடனே எனது அசல் சான்றிதழ்களை எடுத்துக் கொண்டு என்னை செல்போனில் தொடர்பு கொண்ட தொட்டிபாளையம் VAO அவர்களை நான் அன்றைய தினமே காலை சுமார் 11.20 மணியளவில் தொடர்பு கொண்டு அலுவலத்திற்கு வருவதாக செல்லி சென்றேன். கடந்த 11.06.2026ம் தேதி காலை சுமார் 11.45 மணியளவில் நான் திருப்பூர் தொட்டிபாளையம் VAO ஆபிஸ் சென்றேன். அங்கு வாசலில் நின்று கொண்டிருந்தவரிடம் வாரிசு சான்றிதழ் சரிபார்ப்பிற்காக வர சொன்னார்கள் என்று சொன்னேன். அதற்கு அவர் தான்தான் VAO, உங்களை வரச் சொல்லியிருந்தேன்

என்று சொல்லி உள்ளே அழைத்துச் சென்று இரண்டு அறைகளில் உள்ளே இருந்த அறைக்கு வர சொல்லி சான்றிதழ்களை சரிபார்த்தார். சான்றிதழ்கள் அனைத்தும் சரியாக இருப்பதாக சொன்னார். மேலும் கடந்த 2021ம் வருடம் எனது தாய் இறந்தவுடன் ஒரு வருடத்திற்குள் வாரிசு சான்றிதழுக்காக விண்ணப்பித்திருக்க வேண்டும் என்றும், தற்போது நான்கு வருடங்கள் கடந்தவிட்ட படியால் வாரிசு சான்றிதழ் பெறுவதில் சிக்கல் உள்ளதாகவும் தெரிவித்தார். அதனால் ரூ.5,000/- தனக்கு தனியாக கொடுத்தால் தானே RI ஆபிஸ் மற்றும் தாசில்தார் அலுவலகத்தில் பார்த்து சரி செய்து எனக்கு வாரிசு சான்றிதழ் பெற்று தருவதாக கூறினார். நான் என்ன பேசுவது என்று தெரியாமல் நடைமுறையில் ஒரு வருடத்திற்குள் வாரிசு சான்றிதழ் பெற வேண்டுமா என்று தெரியாததால் அதனை உறுதி செய்யும் பொருட்டு நான் யோசித்து சொல்கிறேன் என்று கூறிவிட்டு வந்துவிட்டேன். நான் வந்து விசாரித்து போது வாரிசு சான்றிதழ் பெற எந்த காலக்கெடுவும் இல்லை என்று தெரிந்து கொண்டேன். அதனால் மீண்டும் கடந்த 12.06.2026ம் தேதி சுமார் 11.00 மணியளவில் நான் திருப்பூர் தொட்டிபாளையம் VAO ஆபிஸ் சென்று ஏற்கனவே பெயர் தெரிந்த VAO திரு.ஞானசேகரை அவரது அறையில் பார்த்தேன். அப்போது அவர் தான் ஏற்கனவே கூறியவாறு பணம் ரூ.5,000/- கொண்டு வந்துள்ளீர்களா என்று கேட்டார். நான் வாரிசு சான்றிதழ் பெற சட்டபடி எந்த கால வரையரை இல்லை என்று கூறினேன். அதற்கு அவர் நான் அப்ரூவல் செய்தாலும் மேலே உள்ள அதிகாரிகள் பணம் வரவில்லை என்று ரிஜெக்ட் செய்துவிடுவார்கள் என்று கூறினார். அதற்கு நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டேன். அதற்கு அவர் ரூ.5,000/- கொடுத்தால் தானே அனைவரிடமும் பேசி சுமூகமாக வாரிசு சான்றிதழ் கிடைக்க வழிவகை செய்வதாக கூறினார். நான் எனது குழந்தைகளின் பள்ளி பீஸ் கட்டிவிட்டதால் உடனடியாக பணத்தை ரெடி செய்ய முடியாது என்றும், அதுவும் அவ்வளவு பணம் ரெடி செய்ய சிரமமாக இருக்கும் என்றும் கூறினேன். அதற்கு அவர் வேண்டுமென்றால் ரூ.1,000/- குறைத்து கொண்டு ரூ.4,000/- கொடுத்தால் தான் வாரிசு சான்றிதழ் பெற முடியும் என்றும், மேலும் தான் உடனடியாக எனது விண்ணப்பத்தை அப்ரூவல் செய்து அனுப்பிவிடுவதாகவும் இரண்டு நாட்களில் ரூ.4,000/- ரெடி செய்துவிட்டு வந்து தன்னை பாரக்குமாறு கூறினார். நான் சரி என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன்.

நேற்று 14.06.2026ம் தேதி காலை சுமார் 09.10 மணியளவில் செல்போன் எண். 9789576957லிருந்து எனக்கு ஒரு மிஸ்டு கால் வந்தது. அதை நான் காலை சுமார் 09.20 மணியளவில் திரும்ப அழைத்த போது RI அலுவலகத்தில் இருந்து பேசுவதாக கூறி எனது விண்ணப்பம் சம்மந்தமாக விசாரித்து அப்ரூவல் செய்துவிட்டதாக கூறினார். எனக்கு வாரிசு சான்று பெற ரூ.4,000/- லஞ்சமாக VAO திரு.ஞானசேகர் அவர்களுக்கு கொடுப்பதற்கு விருப்பம் இல்லை. எனவே திருப்பூர், தொட்டிபாளையம் VAO திரு.ஞானசேகர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு Sd/-xxxx (K.Govindarajan)15/06/2025. Submitted, Received the complaint on 15.06.2026 at 08.45 hrs., and made preliminary verification between 08.45 hrs., and 09.30 hrs., and after getting approval from DVAC, Chennai, a case was registered in Tiruppur V&AC Cr.No.05/2026/AC/TPR u/s 7 (a) & (b) of Prevention of Corruption (Amendment) Act 2018 on 15.06.2026 at 09.30 hrs. Sd/- xxxx (B.Geethalakshmi) 15.06.2026 Inspr. V&AC, TPR.

Original FIR along with original complaint of Tr.K.Govindarajan, S/o.Krishnamoorthy (late), D.No.1A, State Bank Colony 3rd Street, Rayapuram Road, Tiruppur District is submitted to the Hon'ble Principal District and Sessions Judge, Principal District and Sessions Court, Tiruppur and a copy of FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

15/6/26

(B.Geethalakshmi),
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Tiruppur.